முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

## ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 08 திகதி முதல்
சோபகிருது வருடம் மார்கழி மாதம் 15 திகதி வரை
(24.12.2023 ஞாயிறு முதல் 31.12.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மகா அவதார ஞானியே
மாதரும வழி கொண்டே
செகத்தினை வென்று மீட்க
சித்திமிகு வரம்பல கண்ட அரங்கனே
2. அரங்கனே உமை போற்றி
அறிவிப்பேன் இந்தியா தமிழகத்தில்
வருங்கால பலனாக சோபகிருது சிலைதிங்கள்
வகையான அட்டமதிகதி மேல் மூவைதிகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
வருங்கால பலனாக அகத்திய மகரிஷியும்
வார ஆசிதனை உரைப்பேன்
வதையென மக்கள் மேலான
4. மேலான வரிச்சுமை கொடுமை
மக்களின் அத்தியாவசிய தேவைமேல்
மேலாக கூட்டி வருக வருக
மண்ணுலகில் ஆளுமைக்கு பின்னடைவு
5. பின்னடைவு கொள்ள நேரும்
பேருக்குத் தருகின்ற இலவசங்கள்
இன்னாளில் எடுபடாமல் போகி
எல்லாம் கண் துடைப்பெனும்

6. எனும் அறிவுத்தெளிவு இனி
எங்கும் மக்களுக்கு விளங்கி
தானாகவே மக்களும் உரிமையை
தட்டிக் கேட்கும் நிலை பெருகுமப்பா
7. அப்பனே பதுக்குகின்ற நிலை
அரசியல் அதிகாரிகளென
தப்பாக எங்கு நடந்தாலும்
தரணியில் வெளிப்பாடாகி
8. ஆகியே தலைகுனிவு சோடை
ஆபத்து பின்னடைவு என
அகிலமே பார்க்கும்படி ஆளுமைக்கு
ஆபத்து கண்டடைய நேருமப்பா
9. அப்பனே இனியும் ஆளுமைகள்
அள்ளித் தெளிக்கும் வாக்குறுதிகளை
தப்பிக்க நேராது நிறைவேற்றாமல்
தக்கபடி முறைமுடித்து தருமவழி
10. தருமவழி இந்திய தமிழக ஆளுமைகள்
தன்செயல்பாடுகளை மெருகேற்ற
வருங்காலம் வளங்குன்றாதபடி
வறுமை அணுகா நல்லாட்சியாக மலரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மார்கழி மாதம் **08**ம் நாள் **24.12.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் **15**ம் நாள் **31.12.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

முருகப்பெருமானின் சக்தி வடிவமாய் மகா அவதாரமாக வந்துதித்திட்ட மகாஞானியே அரங்கா தருமத்தின் மூலமே இக்கலியுகத்தினை வென்று மீட்டு மக்களை காத்து இரட்சித்திடவே எல்லையில்லாது வரங்களை பெற்று இவ்வுலகை காக்க அவதாரமாய் வந்துதித்த ஆறுமுக அரங்க மகா தேசிகரே உம்மை போற்றியே இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் மார்கழி மாதம் **08**ம் நாள் **24.12.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் **15**ம் நாள்

**31.12.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்திலே நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மக்களை துன்புறுத்தும் விதமாக மக்கள் மீது வரிச்சுமையை அதிகப்படுத்தினால் மக்களின் அன்றாட தேவைகளான அத்தியாவசிய பொருள்கள் மீது மேலும் மேலும் வரிகளை போட்டால் ஆட்சி புரிவோர்க்கு வரும் காலம் பின்னடைவு உண்டாகுமப்பா.

மக்களுக்கு அளிக்கும் இலவசங்கள் மூலம் மக்களை இனி சமாதனப்படுத்த முடியாமல் போகும். ஆள்பவர்கள் அளிக்கும் இலவசங்கள் எல்லாம் வெறும் கண்துடைப்பு என்கிற அறிவுத் தெளிவு மக்களிடையே அறிவுத் தெளிவு இனி வரும் காலங்களிலே மிகுதியாக உண்டாகி மக்கள் தெளிவடைந்து மக்களின் உரிமையை மக்களே தட்டி கேட்கின்ற நிலை உருவாகிடுமப்பா.

மக்களுக்கு தேவையான பொருள்களை பதுக்கல் செய்கின்ற அரசியல்வாதிகளின் செயல்பாடுகளும் அதிகாரிகளின் செயல்பாடுகளும் இனி அவர்கள் எங்கு செய்தாலும் எங்கு நடந்தாலும் அது உலகிற்கு வெளிப்பட்டு தவறு செய்தவர்கள் தலை குனிவு அடைவார்கள், துன்பங்கள் உண்டாகும், அவர்கள் பின்னடைவை சந்திப்பார்கள்.

இவ்வுலகமே அரசியல்வாதிகளின் தவறான செயல்பாடுகளையும் அதிகாரிகளின் தவறான செயல்பாடுகளையும் பார்ப்பதினாலே ஆட்சி புரிவோர்க்கு ஆளுமையில் பல சிக்கல்கள் உண்டாகுமப்பா. ஆதலினாலே இனிமேலாகினும் ஆள்பவர்கள் மக்களுக்கு வாக்குறுதிகளை மனம்போன போக்கிலே அள்ளி தெளிக்காமல் நிறைவேற்ற முடிகின்றவைகளை மட்டுமே வாக்குறுதிகளாக அளித்து மக்களின் நம்பிக்கையை பெற வேண்டும் தர்மத்தின் பாதையிலே ஆட்சி செய்வோர் வந்து அவரவரின் செயல்பாடுகளை செய்து வந்து ஆட்சி முறைமைகளை மெருகேற்றிட வரும் காலங்கள் நல்ல வளம் மிக்க நல்லாட்சியாக இந்தியா தமிழகம் கண்டு சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–